




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஏப்ரல் - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 03.04.2020

We Shine Academy™

guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்




We Shine Academy™





# இந்திய நிகழ்வுகள்

- கொரோனா நோய்த்தொற்று மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர் நிலை குறித்து அறியவும், அதிகாரிகளுக்கு மக்கள் தகவல் அளிக்கவும் ஆரோக்கியசேது என்ற **புதிய செல்லிடப்பேசி செயலியை மத்திய அரசு வியாழக்கிழமை (02.04.2020) அறிமுகம் செய்துள்ளது**.
  - **செய்தி துளிகள்:**
    - ஆரோக்கியசேது என்ற புதிய செயலி ஒவ்வொரு இந்தியரின் ஆரோக்கியம் மற்றும் நலத்துக்கானதாகும். இதன் மூலம் **கொரோனா நோய்த் தொற்றால் தாங்கள் பாதிக்கப்படுவோமா என்பதை பொதுமக்கள் அறியலாம். புளூடூத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (ஆர்டிபிஷியல் இன்டலிஜென்ஸ்) மூலம் பொதுமக்கள் மற்றவர்களுடன் கொண்டிருக்கும் தொடர்பை வைத்து கணிக்கும்.**

- பொதுத் துறையைச் சேர்ந்த தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனம் (என்டிபிசி) **பிரதமர் நிதிக்கு ரூ.257.5 கோடியை வழங்குவதாக வியாழக்கிழமை (02.04.2020) அறிவித்துள்ளது.** கொரோனா நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பிரதமரின் நிவாரண நிதிக்கு ஏராளமான நிறுவனங்கள் பங்களிப்பை வழங்கி வருகின்றன..
  - **செய்திகள் துளிகள்:**
    - நிதிச் சேவையில் ஈடுபட்டு வரும் எச்டிஎ.்.ப்சி குழுமம் பிரதமர் நிதிக்கு **ரூ.150 கோடியை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. தனியார் துறையைச் சேர்ந்த கரூர் வைஸ்யா வங்கி அதன் சமூகப் பொறுப்புணர்வு திட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பிரதமர் நிவாரண நிதிக்கு ரூ.5 கோடியை நன்கொடையாக** வழங்குவதாக அறிவித்துள்ளது.

# உலக நிகழ்வுகள்

- உலக வங்கி கொரோனா வைரசை எதிர்த்துப் போராட இந்தியாவுக்கு **1 பில்லியன் டாலர்கள் தொகையை அவசரகால நிதியாக வழங்குவதாக அறிவித்துள்ளது**.
    - உலக வங்கியின் முதற்கட்ட உதவி 1.9 பில்லியன் டாலர்களாகும், இது 25 நாடுகளுக்கான உதவித்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
    - **செய்தி துளிகள்:**
        - பாகிஸ்தானுக்கு 200மில் டாலர்கள், ஆப்கானுக்கு 100மில்லியன் டாலர்கள், மாலத்தீவுகளுக்கு 7.3 மில்லியன் டாலர்கள், இலங்கைக்கு 128.6 மில்லியன் டாலர்கள் வழங்குகிறது உலக வங்கி

- **சீனாவின் உள்ளூர் ரயில் நிலையம், ஓட்டல்கள், வூஹான் நகர எல்லைகள் உள்ளிட்ட இடங்களில், சுகாதாரத்துறையினர், "மொபைல் போன் பார்கோடு" வைத்துள்ளனர்.**
    - மக்கள், ரயில் அல்லது ஓட்டல்களுக்குள் செல்வதற்கு முன், அந்த பார்கோடை, தங்கள் மொபைல் போன் மூலம், "ஸ்கேன்" செய்ய வேண்டும். போனில் பச்சை குறியீடு வந்தால், அவர்களை உள்ளே அனுமதிக்கிறார்.
    - **சிவப்பு குறியீடு வந்தால், தொற்றுக்கு ஆளானவர், அறிகுறியுடன் இருந்தவர் என, அர்த்தம், மஞ்சள் குறியீடு வந்தால், அவர் தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் தொடர்பில் எனவே அவருக்கும், அனுமதி மறுக்கப்படுகிறது.**
    - **செய்தி துளிகள்**
        - சீனா, தங்கள் குடிமக்களை பற்றி தகவல் பராமரிப்புக்கு, "பிக் டேட்டா" என்ற மென்பொருளை, நீண்ட காலமாக பயன்படுத்தி வருகிறது. அது, கொரோனாவுக்கு பிறகான காலகட்டத்தில், அவர்களுக்கு பெரிதும் உதவுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- கொரோனா நோய் வேகமாக பரவி வரும் நிலையில் உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு, கண்காட்சி அரங்கங்கள் கொரோனா சிகிச்சை மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.
    - **செய்தி துளிகள்**
        - விளையாட்டு அரங்கங்களில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான படுக்கை வசதிகளுடன் கூடிய சிகிச்சை மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. ஈரானில் ஒரு விளையாட்டு அரங்கம் **2000 படுக்கைகள் கொண்ட சிகிச்சை மையமாக மாறி உள்ளது. அமெரிக்காவின் பிலடெல்பியா டெம்பிள் பல்கலைகழக விளையாட்டு அரங்கம் 200 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையமாக மாற்றப்பட்டுள்ளது.**

## திருக்குறள்

**குறள் எண் :** 157
**குறள் பால் :** அறத்துப்பால்
**குறள் இயல் :** இல்லறவியல்
**குறள் அதிகாரம் :** பொறையுடைமை

**குறள்:**

**"திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்**
**தறனல்ல செய்யாமை நன்று"**

**விளக்கம் :**

தனக்குப் பிறர் தீய செயல்களைச் செய்தாலும், அவற்றுக்கு வருந்தி அறமற்ற செயல்களைச் செய்யாமல் இருத்தல் நல்லது.